# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : STC No.223/2025 | Date: 06.02.2026 |
| Deposition of Witness for | : **பு.சா.1** | |
| Name | : **அங்கமுத்து** | |

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–**

1) காசோலை மற்றும் புரோநோட் தவிர வேறு எந்த ஆவணமும் எதிரியிடம் இருந்து பெற்றேனா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிரியின் அம்மாவின் பெயரில் உள்ள வீட்டின் அசல் பத்திரத்தை வைத்து அவர் பெற்ற வங்கி கடனை அடைத்து வங்கியில் இருந்து ஆவணத்தை பெற்று அதனை வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வீட்டினை எனது பெயரில் பதிவு செய்து தர சொல்லி நான் மயிலாடுதுறையில் உள்ள பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு சென்றுள்ளேன் என்றால் சரியல்ல.

2) எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லும் ரூ.35,00,000/–ம் தொகைக்கு பதிலாக காசோலையை ரூ.43,00,000/–ற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கொடுத்த தொகைக்கு வட்டியுடன் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். கடந்த 12–09–2023 ம் தேதியன்று எதிரிக்கு RTGS மூலம் ரூ.20,00,000/–ம் கொடுத்துள்ளேன். கடந்த 05–06–2024 ம் தேதி ரூ.15,00,000/–ம் தொகைகை ரொக்கமாக கொடுத்தேன். முதலில் கொடுத்த ரூ.20,00,000/–த்தை ஒருவருட காலத்தில் திருப்பி தருவதாக எதிரி கூறினார்.

3) நான் கொடுத்த ரூ.20,00,000/-த்தை எதிரி திருப்பி செலுத்ததாத சமயத்தில் நான் மீண்டும் எதிரிக்கு ரூ.15,00,000/-ம் தொகை கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல, எதிரி என்னிடம் ரூ.40,00,000/-ம் கேட்டார். எதிரிக்கு கொடுத்த ரூ.15,00,000/-ம் தொகைக்கு கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்துள்ளார். கடந்த 12-09-2023ம் தேதி கொடுத்த கடனுறுதி சீட்டில் கண்ணன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்கள் சாட்சியாக கையொப்பம் செய்தனர், அதனை எழுதியவர் சந்திரசேகர் ஆவார். கடந்த 05-06-2024ம் தேதி கொடுத்த கடனுறுதி சீட்டில் கண்ணன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்கள் சாட்சியாக கையொப்பம் செய்தனர், அதனை எழுதியவர் சந்திரசேகர் ஆவார்.

4) கண்ணன், செந்தில்குமார் மற்றும் சந்திரசேகர் ஆகியோர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் செந்தில்குமார் அக்கா மகன், சந்திரசேகர் எனக்கு தூரத்து உறவுமுறை, கண்ணன் எனக்கு உறவுமுறை இல்லை. கண்ணன், சந்திரசேகர் ஆகியோர் என்னிடம் வேலை செய்யும் நபர்கள் என்றால் சரியல்ல. இரண்டாவதாக கொடுத்த கடனுறுதி சீட்டில் முதலாவதாக கொடுத்த கடனுறுதி சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது ஆக்ஸிஸ் வங்கி, திருச்செங்கோடு கிளையின் மூலமாக ரூ.20,00,000/-ம் அனுப்பியுள்ளேன். யாருடைய வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளேன் என்றால் Home care service, அதன் உரிமையாளர் பிரபாகரன் என்ற வங்கி கணக்கிற்கு கடந்த 12-09-2023ம் தேதியன்று அனுப்பியுள்ளேன்.

5) ஆக்ஸிஸ் வங்கி, திருச்செங்கோடு கிளையில் எனக்கு வங்கி கணக்கு இல்லை என்றால் சரியல்ல. காசோலையை எங்கு வைத்து, எந்த தேதியில் பெற்றேன் என்றால் பிரபாகரன் என்னுடைய வீட்டிற்கு

வந்து கடந்த 02-01-2025 ம் தேதி கொடுத்தார். அப்போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். எதிரி வெற்று காசோலை தான் கொடுத்தார் என்றும், நான் தான் பூர்த்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல, பூர்த்தி செய்து தான் கொடுத்தார். கடனுறுதி சீட்டு கொடுத்தபோது யார் உடன் இருந்தார்கள் என்றால் சாட்சிகள் மற்றும் எதிரியை தவிர மற்ற யாரும் உடன் இல்லை. மூவரின் முகவரி 1) கண்ணன், த/பெ.ஜெகநாதன், சிங்காரவேலன் நகர், சமயபுரம், 2) செந்தில்குமார், த/பெ.முருகைய முதலியார், வாய்க்கால்தோட்டம், திருச்செங்கோடு, 3) சந்திரசேகர், த/பெ.பழனியப்பன், காமராஜ்ர் தெரு, தேவனாம்குறிச்சி, நாமக்கல் மாவட்டம் ஆகும்.

6) காசோலையில் உள்ள தேதிக்கும், புரோநோட்டில் உள்ள தேதிக்கும் 02 வருட இடைவெளி இருப்பதை எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், எதிரி முதல் தவணை கடன் பெற்ற பிறகு ஒரு வருடம் கழித்து தருவதாக கூறினார், மீண்டும் இரண்டாவதுமுறை கடன் பெற்ற பிறகு இரண்டு கடன்களையும் சேர்த்து முதல் வாரம் ஜனவரி 2025 ம் வருடத்தில் தருவதாக கூறினார்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,

Sd/-Angamuthu

Judicial Magistrate No.1,
Sankari.